# WHERE ARE YOU GOING ?

## நீ எங்கெ போய்க்கொண்டிருக்கிறாய்?

காலம் பறந்துகொண்டிருக்கிறது, நாட்கள், வாரங்கள், மாதங்கள் மற்றும் வருஷங்கள் நாம் உணரும்முன் அதிவேகமாக கடந்துபோய்க் கொண்டிருக்கிறது. அவைகள் மறுபடியும் திரும்ப வராததுபோல தோன்றி, நித்தியமாய் மறைந்துவிடுகின்றன. அதேபோல ஒவ்வொரு நாளின் சம்பவங்களும், தற்காலிகமானதும் வெகுகாலத்துக்கு முன்னே மறைந்துவிட்டது போன்றும் நாம் உணருகிறோம். இவ்வுலகத்திலுள்ளவைகளெல்லாம் பறந்து மறைந்து போகிறது, தற்காலிகமானது; ஒன்றும் நித்தியமாய் நிலைத்திருப்பதில்லை. **ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம் (சங்கீதம் 90 : 9).** வாழ்க்கையின் தொழில்கள், வேலைகள் மற்றும் இலக்குகளை அடையும் முயற்சிகள் ஆகியவற்றில் நாம் ஈடுபட்டிருப்பதால், அதிசீக்கிரமாய் கடந்துபோய்க்கொண்டிருக்கிற காலத்தை நாம் உணராமல் போய்விடுகிறோம்; நம்முடைய வாழ்க்கையின் வாழ்நாட்கள் நம்மைவிட்டு சீக்கிரமாய் கடந்துபோய்க்கொண்டிருக்கின்றன; நம்முடைய பூமிக்குரிய பிரயாணத்தின் முடிவு வேகமாய் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை அறியாமல் காலங்கழிக்கிறோம். அல்லது, நம்முடைய காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்ற உணர்வு இருந்தால், ஒன்று அந்த எண்ணத்தை நிராகரிக்கிறோம் அல்லது கடைசி நாட்களில் எல்லாம் சரியாய் நடக்கும் என்று நம்மை நாமே தேற்றிக்கொள்ளுகிறோம்.

நம்முடைய மரணம் மிகவும் அருகாமையிலே இருக்கிறது என்பதை மனதில் வைத்துக்கொள்வது எவ்வளவு முக்கியமாயிருக்கிறது; அதிலே நாம் ஒரு இதயதுடிப்பை போலவே இருக்கிறோம் என்றும்; நாம் மரிக்கும்போது நரக அல்லது மோட்ச நித்தியத்திற்கோ போய்விடுவோம், மறுபடியும் தப்பிக்கொள்ளவோ திரும்பவோ முடியாது என்றும் நமக்கு அறிவு இருக்க வேண்டும். மரணம் எல்லாருக்கும் பொதுவான ஒரு சம்பவமாதலால், நாம் அதை சிந்தித்துப் பார்க்கிறதில்லை. அந்த சம்பவத்திற்கும் நமக்கும் சம்பந்தமில்லை என்கிறதுபோல ஒரு உணர்வை நமக்குள் நாம் உண்டுபண்ணிக்கொள்கிறோம். மரணம் என்பது சாதராணமானது, உண்மையிலே சம்பவிக்காது என்று அலட்சியமாய் இருப்பதால், அதைக்குறித்து கரிசனையில்லாமல் கவலையில்லாமல் இருக்கிறோம். அதற்குப் பதிலாக இன்னும் அநேக வருஷங்கள் வாழுவோம் என்கிற ஒரு குருட்டு நம்பிக்கையோடு நாம் காலந்தள்ளிக்கொண்டிருக்கிறோம். ஆனால், தேவனுடைய வார்த்தை **"நாளையத் தினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டாதே; ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே" (நீதிமொழிகள் 27 : 1)** என்று நம்மை எச்சரிக்கிறது.

யுத்தத்திலும் விபத்துக்களிலும் அநேகர் மரிக்கிறதையும், ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் பசியினால் அநேகர் மரிக்கிறதையும் நாம் கேள்விப்படுகிறோம், செய்தித்தாள்களில் வாசிக்கிறோம். ஆனால் இதைப்பற்றி நாம் சிந்திக்கிறதில்லை, நாம் தனிப்பட்ட விதத்தில் அதில் ஒரு நபராய் இல்லாதபடியால், நாம் அதில் கவனம் செலுத்துவதில்லை. பக்கத்து தெருவில் ஒருவர் மரிக்கிறார் என்றால், ஒருவேளை நம்மை கொஞ்சநேரம் நிதானித்து சிந்திக்கவைக்கும்; ஆனால், அது சீக்கிரத்தில் நம் மனதைவிட்டு போய்விடுகிறது. நாமும் நம்முடைய அநுதின அலுவல்களில் ஈடுபட்டு, அப்படிப்பட்ட சம்பவம் நமக்கு நேரிடாது என்ற எண்ணத்தோடு நாம் செயல்படுகிறோம், பாதுகாப்பாய் இருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் நமக்கு அதிக காலம் எஞ்சியிருக்கிறது என்பது நம்முடைய எண்ணம்.

இந்த உலகத்தைவிட்டு கடந்துபோகிற அந்த ஷனமே (ஒருவேளை இந்த நாள் முடிவதற்குள்ளே மரணம் நமக்கு சம்பவிக்கலாம்) எல்லா நம்பிக்கையும் அற்ற, **நித்திய ஜுவாலைக்கு முன்பாக (ஏசாயா 33 : 14) நாம் கண் விழிப்போம்** என்ற உண்மையை நாம் அறிந்திருந்தால், மரணம் என்பதைக் குறித்த எண்ணம் நமக்குள் ஒரு ஜாக்கிரதையை உண்டுபண்ணும். ஆனால், இந்த தேவனுடைய வார்த்தை, ஒவ்வொரு இரட்சிக்கப்படாத பாவிக்கும் கொடுக்கிற எச்சரிப்பின் சத்தமே அல்லாமல் வேறல்ல. **"துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள்" (சங்கீதம் 9 : 17), உதாரணமாக : ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து"** (மோட்சம், நரகம் உண்டு என்பதில் சந்தேகமில்லை என்பதை உணர்ந்தான்) **(லூக்கா 16 : 22)** என்று வேதவாக்கியங்கள் தெளிவாகவும் வெளிப்படையாகவும் சொல்லுகின்றன.

அநேகர் தங்கள் அழிவுள்ள சரீரங்களை குறித்தே கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அழிவில்லாத ஆத்துமாக்களைக் குறித்து கவலையில்லாமல் இருந்து, ஆத்தும வாழ்வைப்பற்றி சிந்திக்காதவர்களாயிருக்கிறார்கள். **"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்" (மாற்கு 8 : 36, 37).** இந்த மாயையான வருஷங்கள் முடிந்தபிறகு, தங்களுக்கு முன்பாக எண்ண எஞ்சியிருக்கிறது என்பதை அநேகர் அறியாமல், வாழ்க்கையின் முடிவில் எல்லாம் சரியாய் அமைந்துவிடும் என்று நினைத்துக் கொண்டு, அநேகர் தங்களுடைய வாழ்க்கைப் பயணத்தில் இலக்கு அல்லது நோக்கம் என்னவென்று அறியாமல் அழிந்துபோகின்றனர். இவர்கள் இவ்வுலக வாழ்வையே சதமென்று நம்பி, அதனுடைய பலாபலன்கள் மேலேயே கவனமாயிருக்கின்றனர்.

அநேகர் தாங்கள் பாவி என்ற மனச்சாட்சி இல்லாமல் வாழ்கின்றனர். தாங்கள் பூரணரல்ல என்று அவர்கள் அறிந்திருந்தும், ஏதோ ஒன்று அவர்களுக்குள் தவறு என்று அறியாமலுமிருக்கிறார்கள். அவர்கள் சமுதாயத்தில் மதிப்பிற்குரியவர்களாகவும், நியாயப்படி நேர்மையாய் நடக்கிறவர்களாகவும், மற்றவர்களைவிட தாங்கள் கெட்டவர்களல்ல என்றும் நினைத்துக்கொள்ளுகின்றனர். தேவனுடைய வார்த்தையைக் குறித்து, கொஞ்சம் அக்கறையுள்ளவர் களாயிருந்தாலும், தாங்கள் பரலோகம் போவோம் என்று முழுமையாக நம்புகின்றனர். சிலர் தங்களை பாவிகள் என்று ஒப்புக்கொண்டாலும், அவர்களுடைய நற்கிரியையகள் துர்க்கருமங்களைவிட அதிகமாயிருக்கிறது, அதனால் பரலோகம் செல்வோம் என்று தங்களை தேற்றிக்கொள்ளுகின்றனர். ஆனால், அவர்கள் நற்கிரியைகளினால் நீதிமானாகிறதில்லை. சிலர் தாங்கள் திருச்சபைக்கு போவதினாலும், ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதினாலும் எல்லாம் சரியாயிருக்கிறது என்று பெருமிதம் கொண்டுள்ளனர். அதற்கு மாறாக, **"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல்" (தீத்து 3 : 5)** என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. **"தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே" (மத்தேயு 19 : 17). "எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்" (ரோமர் 3 : 23). தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் (யோவான் 3 : 36).** அவன் ராஜாவானாலும் பிச்சைக்காரரானாலும், உயர்ந்தவரானாலும் தாழ்ந்தவரானாலும், பணக்காரரானாலும் ஏழையானாலும், இரக்கமுள்ளவரானாலும் இரக்கமற்றவரானாலும், பக்தியுள்ள வரானாலும் பக்தியற்றவரரானாலும், கிறிஸ்து இல்லாத ஒவ்வொரு பாவியின் நிலைமையும், தேவனுடைய பார்வையில் தேவனுடைய மகிமையற்ற பாவிகளாகவே இருக்கிறார்கள் என்று எண்ணப்படுகிறார்கள்.

தேவனுடைய கண்டிப்பு, பயங்கரங்கள் மற்றும் நியாயத்தீர்ப்பு இவைகளை அசட்டைப்பண்ணுகிற வெறுக்கிற மனிதனுடைய ஜென்ம சுபாவம் எவ்வளவு ஆபத்தானது என்று கவனியுங்கள்; மரித்த பிறகு நியாயத்தீர்ப்பு உண்டு என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது (எபிரெயர் 9 : 27). இந்தச் சத்தியம் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டேயிருப்பதால், அநேகர் இதை தள்ளிவிடுகிறார்கள். மனிதர்கள் இந்த எண்ணங்களை தங்களை விட்டு நீக்கி, தங்கள் சுயவழியில் போய்க் கொண்டிருக்கின்றனர். ஒரு சிலர் மட்டுமே இருதயத்தில் குத்தப்பட்டவர்களாய், **"இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" (அப்போஸ்தலர் 16 : 30)** என்று கேட்கின்றனர். உன்னுடைய நித்திய ஆத்துமா ஆபத்தான நிலைமை யிலிருக்கும்போது நீ கவலையில்லாமல் இருப்பது எவ்வளவு புத்தியீனம் என்பதை சிந்தித்துக்கொள்.

தூரப்பார்வையில் எதிர்காலத்தை பார்க்கும்போது: **'இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை' (பிரசங்கி 12 : 7)** என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். என் அருமையான நண்பரே, இந்தக் காரியத்தை நீ இலேசாக எடுத்துக்கொண்டால், உன்னுடைய மதியீனமே ஒருநாளில் உன்னை ஆபத்துக்குள்ளாக கொண்டுபோகும். **"நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன்வழியை விட்டுத் திரும்பி பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்கிறேன் ....... நீங்கள் ஏன் சாக வேண்டும்"** என்பதே உனக்கு, தேவனுடைய கிருபையுள்ள வார்த்தையாகும் **(எசேக்கியேல் 18 : 30, 33 : 11). "கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" (ரோமர் 5 : 6)** என்பதால் இந்த கிருபையுள்ள வார்த்தை நமக்கு வருகிறது. **"அவர் நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்" (கலாத்தியர் 1 : 4)** மற்றும் **"கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலாத்தியர் 3 : 13).**

ஒ பாவியே! தேவனுடைய கோபம் உன் கழுத்திலே தொங்கிக்கொண்டிருக்க, இன்னும் ஒருநாள் பாவத்திலே தொடர்ந்து இருப்பாயா? **"கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார் (அவர் மன்னிக்கிறதற்கு பரிபூரணமுள்ளவராயிருக்கிறார்) (ஏசாயா 55 : 6,7)** என்ற தெய்வீக புத்திமதிக்கு செவிகொடு. நேரமும் தருணமும் உன்னுடையதாயிருக்கும்போது, விசுவாசத்தினால், உயர்த்தப்பட்ட கிறிஸ்து இயேசுவைப்பார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் **(ரோமர் 10 : 13). "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத்தேயு 11 : 28)** என்ற வாக்குத்தத்தம் உங்களுடையது. **"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6 : 37)** என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

பாவிகள் வரவேற்கப்படுகின்றனர், மட்டுமல்லாமல் பாவிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். **"நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (மத்தேயு 9 : 13)** என்று இயேசு சொல்லியிருக்கிறார். **"இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சனிய நாள்" (2. கொரிந்தியர் 6 : 2). "அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்" (சங்கீதம் 2 : 12).**

**I.C. HERENDEEN**

**ஐ.சி. ஹெறன்டீன்**